
உ

சிவ சிவ

# அன்புநெறி

மலர்-14 மார்ச் 2010 இதழ்-8

$1.50



திருமாலும் பன்றியாய்ச் சென்று உணராத் திருவடியை
உருநாம் அறிய, ஓர் அந்தணன் ஆய், ஆண்டுகொண்டான்
ஒருநாமம், ஓர் உருவம், ஒன்றும் இல்லாற்கு, ஆயிரம்
திருநாமம் பாடி, நாம்–தெள்ளேணம் கொட்டாமோ!

–மாணிக்கவாசக சுவாமிகள்




சைவப்பெரியார் தமிழர் பெருந் தலைவர்
பொய்யிற் புனிதர் பொதுத் தொண்டர் – ஐயன்
சிவலிங்கம் சொல்லாமற் கொள்ளாமற் சென்றார்
சிவலோகம் என்னே திறம்

– வி. கந்தவனம்

**DR. ILLANGO & ASSOCIATES**

DENTAL OFFICE (OPEN 7 DAYS A WEEK)




**உங்கள் சேவை கருதி இரு இடங்களில் வாரத்தின் ஏழு நாட்களும் பல் வைத்திய நிபுணர்களின் சேவைகள்.**

**Dr. M. Illango**

B. D. S, D orth (Oslo)
General Practioner Mainly Orthodontics

**Dr. S. Raveendran**

B.D. S., M.S, F. D. S. R. C. S. (Eng.)
General Practioner

**Dr. Janaki Illango**

B. D. S. Family Dentistry

**SCARBOROUGH OFFICE**
3852 Finch Ave. E., # 303
Scarborough, ON
**(416) 292 -7004**

**MISSISSAUGA OFFICE**
3025 Hurontario St., # 102
Mississauga, ON
**(905) 270-7844**


## அன்புநெறி சந்தா விபரம்

தனிப்பிரதி **$1.50,** சிறப்புப் பிரதி **$3.00**

வருடச் சந்தா (12 இதழ்கள்) $20.00

**அஞ்சல் பொதிச் செலவுடன் வருடச் சந்தா:-**

| | |
|---|---|
| **கனடா:** | Can. $ 35.00 |
| **அமெரிக்கா:** | Can. $ 40.00 |
| **ஏனைய நாடுகள்:** | Can. $ 50.00 |

**தொடர்புகட்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா**

Saiva Sidhdhantha Manram, Canada
1008-50 Elm Dr. E. , Mississauga, ON, L5A 3X2 Canada
(Tel.: 905-566-4822)

உ

சிவ சிவ

# அன்புநெறி

மலர் -14 | விரோதி மாசி – பங்குனி, மார்ச் 2010 திருவள்ளுவர் ஆண்டு 2041 | இதழ் - 8

**பொருளடக்கம்** **பக்கம்**

1. திருமுறைகள்– தமிழ் மந்திரம். . 4
2. திருக்குறளில் சைவசித்தாந்தம். . 6
3. ஆசான் அருளால்....... . . . 10
4. சிவஞானபாடியத்தில் சத்தும் அசத்தும். 16
5. நம்பியாரூரர் . . . . 21
6. நீத்தார் நயப்புரை. . . . 25

**சிறுவர் பகுதி**

7. ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை–2 27
8. சைவபோதம் – 2 . . . 28

**ஆசிரியர் :** திருமதி வடிவழகாம்பாள் விசுவலிங்கம்
**நிர்வாக ஆசிரியர்:** திரு. தி. விசுவலிங்கம்
**உதவி ஆசிரியர்:** திருமதி அநிதா திருமுருகா
**வெளியீடு:** சைவசித்தாந்த மன்றம், கனடா

**காரைக்கால் அம்மையார்**

**குருபூசை நாள்: பங்குனி சுவாதி**

தங்கு புகழ்க் காரைக்கால் வணிகன் மிக்க
தனதத்தன் தரும்புனித வதியார் மாவின்
செங்கனிகள் திருவருளால் அழைப்பக் கண்டு
திகழ்கணவன் அதிசயித்துத் தேசம் நீங்க
அங்கஉடல் இழந்துமுடி நடையால் ஏறி
அம்மையே எனநாதன் அப்பா என்று
பொங்குவட கயிலைபணிந்து ஆலங்காட்டில்
புனிதனடம் அனவரதம் போற்றி னாரே.

–உமாபதி சிவாசாரியார்

# அன்புநெறி

1008-50 Elm Dr. E. , Mississauga, ON. L5A 3X2 ,Canada
Fax/Tel (905) 566-4822 Email: saivamanram@gmail.com

## திருமுறைகள் - தமிழ் மந்திரம்

திருஞானசம்பந்தர் சுவாமிகள் முதலாகச் சேக்கிழார் சுவாமிகள் ஈறாக இருபத்தேழு அருளாளர்களால் அருளிச் செய்யப்பெற்றவை பன்னிரு திருமுறைகள். இவற்றை நாள்தோறும் முறையாகப் பாராயணம் செய்து பயன்பெறுவோர் சமய உலகிற் பலராவர். பன்னிரு திருமுறைகளும் உலகில் நமக்கு விளையும் இடர்களை அகற்றி நம்மை நன்னெறிப் படுத்தும் அருள் நலம் உடைய மந்திரங்களாக விளங்குவன.

வேத சுலோகங்களை வேத மந்திரம் என்பது போலத் திருமுறைப் பாமாலைகளைத் தமிழ் மந்திரம் என்பது வழக்காறாகும். திருவருட்சத்தி உள்நின்று உணர்த்த நிறைமொழி மாந்தரான நாயன்மார் அருளிச் செய்த ஆணைமொழிகள் ஆதலாலே இவற்றைப் பெருமந்திரங்கள் எனல் சாலப் பொருந்தும். திருவருளால் அருளிக் கூறிய இவ்வாணை மொழிகள் நாயன்மார்களது திருவாய் மொழிகளாக மலர்ந்த அப்பொழுதே அவ்வப் பயன்களைத் தவறாது தந்தன. ஆளுடையபிள்ளை ‘‘இடரினும் தளரினும்’’ பாடப் பொற்கிழி கிடைத்தது. ஆளுடையரசு ‘‘ஒன்று கொலாம்’’ பாட பாம்பு கடித்து இறந்த அப்பூதி அடிகளின் மகன் உயிர் பெற்றெழுந்தான். ஆளுடைய நம்பி ‘‘மீளா அடிமை’’ பாடி வலக்கண் இழந்த பார்வை ஒளியைப் பெற்றார்.

இத்தகைய அற்புதங்களைக் கண்டே

‘‘புனலில் ஏடெதிர் செல்லெனச் செல்லுமே
புத்தனார்தலை தத்தெனத் தத்துமே
கனலில் ஏடிடப் பச்சென் றிருக்குமே
கதவு மாமறைக் காட்டிலடைக்குமே
பனையிலாண்பனை பெண்பனையாகுமே
பழைய என்பு பொற்பாவைய தாகுமே
சினவரா விடந் தீரெனத் தீருமே
சிறந்த சம்பந்தர் செந்தமிழ்ப்பாடலே.’’

ஆகிய பாடல்களைப் புலவோர் பாடினர். இவ்வருளாற்றல் தீயினிற் சூடு போல் திருமுறைப்பாக்களில் என்றுமுள்ளன. அச்சுதக் களப்பாளர் திருவெண்காட்டுத் திருப்பதிகம் ஓதி மெய்கண்டதேவரை

அருந்தவப் புதல்வராய் பெற்றமை யாவரும் அறிந்த பிரபலமான செய்தியாகும். இவ்வண்ணம் ஆளுடைய பிள்ளையாரின் ஆணைமொழிகள் பலித்ததைக் கண்ட மக்கள் அவரை "ஆணைநமதென்றபெருமான்" எனப் போற்றினர். மூவர் தேவாரங்கள் கைகண்ட மந்திரங்களாதல் பற்றியே உமாபதி சிவாச்சாரியாரும்

"கண்ட பெரு மந்திரமே மூவர் பாடல்
கை காணா மந்திரம் கண்ணுதலோன் கூறல்"

என உறுதி கூறினார்.

தமிழ் மந்திரங்கள் வினைகெடுத்துச் சிவகதி அருளும் திறம் உடையன என்பதைத் திருக்கடைக் காப்புகளில் ஆங்காங்கே கூறப்பட்டு இருக்கிறது.

"திருநெறிய தமிழ்வல்லவர் தொல்வினை தீர்த்தல் எளிதாமே"
"பாடல்பத்தும் பாடவல்லார் பாவம்பறையுமே"
"பாடலாயின பாடுமின் பத்தர்காள் பரகதி பெறலாமே"
"சொல்லிய பாட்டின் பொருளுணர்ந்து சொல்லுவார்
செல்வர் சிவபுரத்தின் உள்ளார் சிவனடிக்கீழ்"

ஆகிய அடிகள் இவற்றை எடுத்து இயம்புகின்றன. வீடுபேற்றை விரும்பியவர் எல்லாம் இத்தமிழ் மந்திரங்களைக் உள்ளம் உருகி ஓதினர். தாயுமான சுவாமிகள் மொழிக்கு மொழி தித்திப்பான மூவர் பாடல்களில் ஈடுபாடுகொண்டு

"**அற்றவர்கட் கற்றசிவன்** ஆம் என்ற அத்துவித
முற்றுமொழி கண்டருளில் மூழ்குநாள் எந்நாளோ!"

"**இருநிலனாய்த் தீயாகி** என்ற திருப்பாடடின்
பெரு நிலையைக் கண்டறிந்து பேச்சறுவ தெந்நாளோ!"

"**தானெனை முன்படைத்தான்** என்ற தகவுரையை
நானென்னா உண்மை பெற்று நாமுணர்வ தெந்நாளோ!

என்றவாறு உருகிப் பாடியுள்ளார்.

இத்தமிழ் வேத மந்திரமே நாம் மண்ணில் நல்லவண்ணம் வாழ்வதற்கும், திருவடிப்பேறு பெறுதற்குமான மருந்து, மந்திரம், தந்திரம் ஆகிய யாவுமாம்.

**ஆசிரியர் தி.வி.**

# திருக்குறளில் சைவ சித்தாந்தம்

(சிந்தாந்தக் கலைமணி, மகாவித்துவான் முனைவர்
சி. அருணை வடிவேலு முதலியார், காஞ்சிபுரம்)

தமிழில் உள்ள அளவற்ற நூல்களுள் திருக்குறள் உலகப் பொது நூலாய் விளங்குகின்றது. எனினும் அதனைப் பலர் சமண சமயத்தைச் சார்ந்ததாகக் கருதுகின்றனர். அதற்குக் காரணம் 'கொல்லாமை' என்பதை அந்நூல் தலையாய அறமாகக் கூறுதலாகும். கொல்லாமையைச் சிறப்பித்தல் பற்றி அந்நூலைச் சமண் சமயம் சார்ந்ததாகக் கொள்ளின்

''இரந்தும் உயிர்வாழ்தல் வேண்டின் பரந்து
கெடுக உலகியற்றியான்'' (திருக்குறள் *1062*)

என்னும் குறளில், உலகம் ஒருவனால் படைக்கப்பட்ட பொருளாக அந்நூல் கூறிற்று. இது சமண் சமயத்திற்கு ஏலாக் கொள்கை. 'உலகம் தோற்றமும், அழிவும் இல்லாத பொருள்' என்பது சமண் சமயக் கொள்கை.

''மூவா முதலா உலகம் ஒரு மூன்றும்''

என்பது சீவக சிந்தாமணியின் முதற் பாட்டு

மணிமேகலைக் காப்பிய ஆசிரியருக்கு 'திருக்குறள் புத்த நூல்' – என்பது கொள்கை.

திருக்குறளின் உரையாசிரியர்களுள் சிறந்தவராகிய பரிமேலழகர்க்கு 'திருக்குறள் வைணவ நூல்' என்பது கருத்து.

இவைகளைச் சான்று காட்டி விளக்குதல் இங்கு தேவையில்லை.

ஆங்கிலத்தில் தமிழ் இலக்கிய வரலாறு எழுதிய திரு. பூர்ணலிங்கம் பிள்ளையவர்கள் 'திருவள்ளுவர் எம்மதத்தைச் சார்ந்தவர்' – என்பதை அவர் உடன்பட்டுக் கூறிய பொருள்பற்றித் துணிய இயலாது. 'எந்த மதக் கொள்கைக்கு அவர் மறுப்புச் சொல்லவில்லை! என்பதைப் பார்த்தே அவரது மதத்தைத் துணிதல் வேண்டும் என்றார்; அஃதே சரியான வழி. அப்படிப் பார்க்கும்பொழுது திருக்குறளில் உள்ள ஆயிரத்து முந்நூற்று முப்பது அருங்குறளையும் அப்படியே ஏற்றுக் கொள்ளக்கூடிய சமயம் எதுவாயிருக்கும்? என்று பார்த்தால் அது, சைவசமயம்

ஒன்றாகத்தான் இருக்க முடியும். இதனை இங்கு விளக்க இடமில்லை.

காலம் சென்ற, சித்தாந்த ஞானபானு, திரு. க. வச்சிரவேல் முதலியார் அவர்கள், பல்லாண்டுகட்கு முன்னே "திருக்குறளின் உட்கிடை சைவசித்தாந்தமே" என்ற நூலை எழுதினார். அதில் எனது முன்னுரை உள்ளது.

சைவ சித்தாந்த சாத்திரங்களுள் எட்டுச் சாத்திரங்களை அருளிச் செய்த உமாபதி சிவாச்சாரியார் திருவள்ளுவரை,

"தெய்வப் புலமைத் திருவள்ளுவர்"

என்றும் அவர் செய்த திருக்குறளை,

"நிலைத்தமிழின் – மெய் வைத்த சொல்"

(நெஞ்சுவிடுதூது, கண்ணி 25)

என்றும் போற்றினார்.

பதினான்கு சாத்திரங்களுள் காலத்தால் முற்பட்டவை இரண்டு. அவைகளில் ஒன்று திருக்களிற்றுப்படியார். அந்நூல் இரண்டிடங்களில் (பாட்டு 34, 40) திருக்குறளைப் பிரமாணமாக எடுத்துக் காட்டியுள்ளது.

பதினொன்றாந் திருமுறையிலுள்ள "ஆதியுலா" என்னும் அருட் பிரபந்தத்தை அருளிச் செய்த சேரமான் பெருமாள் நாயனார் அப்பிரபந்தத்துள் இரண்டிடங்களில் திருக்குறள் இரண்டு பாடல்களை மேற்கோளாகக் காட்டியுள்ளார்.

சைவர்கள் திருவள்ளுவரை, 'திருவள்ளுவ நாயனார்' என்றும் 'நாயனார்' என்றும் கூறுவார்கள். இவ்வாற்றால் திருக்குறள் சைவ நூலாகப் பழமையாகவே கொள்ளப்பட்டு வருதல் விளங்கும். ஆகவே அந்நூலின்கண் சைவசித்தாந்தம் இடம் பெற்றிருத்தல் இயல்பே. ஆயினும் அவை அனைத்தையும் இங்கு எடுத்துக் காட்டல் இயலாது. "ஒருபானைச் சோற்றுக்கு ஒரு சோறு பதம்" என்னும் முறையில்தான் காட்ட இயலும்.

சிவஞான சுவாமிகள் தமது "சோமேசர் முதுமொழி வெண்பா" என்றும் நூலின் முதற் பாட்டில் முதல் திருக்குறளில் சொல்லப்பட்ட "ஆதி பகவன்" என்னும் பெயரில் "ஆதி" – என்பது ஆதி சக்தியைக் குறிக்கும். முதற் பொருளைச் 'சிவம், சக்தி' – என்றும் சக்தியைப் 'பராசக்தி, ஆதிசக்தி' என்றும்

வழங்குதல் சைவாகம வழக்கேயாதலின், ஆதி சக்தியோடு கூடிய பகவன் ஆதி பகவன்; எனவே 'அவனை முதல்வனாக உடையது உலகம்' எனக் கூறியது. 'சிவனை முதலாக உடையது உலகம்' என்றே பொருள்படும் – எனக் கூறினார். ஆயினும் அதனைச் சிலர் வலிந்துரையாகக் கருதுதல் கூடும். அதனால், அதனை நான் இங்கு வலியுறுத்தவில்லை.

'ஆதி பகவன்' – என்னும் வடசொல்லைத் தமிழாக்கி "முதற் கடவுள்" என வழங்கினார் பரிமேலழகர் அதில் தவறு ஏதும் இல்லை.

'ஆதி பகவன்' – என்பது ஒருமைச் சொல். முதல் அதிகாரமாகிய "கடவுள் வாழ்த்து" முழுவதிலும் திருவள்ளுவர் கடவுளை ஒருமைச் சொல்லாலே கூறினமை நோக்கற்பாலது. எனவே "முதற் கடவுள் ஒருவனேயன்றிப் பலர் இல்லை" என்பது திருக்குறட் கருத்தாயிற்று.

கடவுளை 'முதற் கடவுள்' – எனச் சிறப்பித்து, அவனை, "ஒருவன்" என்றமையால் 'பணிக்கடவுளர் பலர் உளர்' என்பதும் அவரெல்லாம் 'முதற் கடவுளின் ஆணை வழி நின்று ஒரே ஒரு செயலை ஆற்றி வருவர்' என்பதும் விளங்கும். இக்கருத்துச் சிவஞானசித்தியாரில்

"உரைத்த இத் தொழில்கள் மூன்றும்
மூவருக்கு உலகம் ஓத,
வரைத்து ஒருவனுக்கே ஆக்கி
வைத்ததிங்கு என்னை யென்னின்
விரைக்கம லத்தோன் மாறும்
ஏவலால் மேவி னோர்கள்
புரைத்ததி கார சத்தி
புண்ணியம் நண்ண லாலே" (சூ. *1. 34*)

என விளக்கப்பட்டது.

பணிக் கடவுளர் 'தெய்வம்' என்றும் 'தேவர்' என்றும் சொல்லப்படுவர். கடவுள் ஒருவனே. "ஒருவன் என்னும் ஒருவன் காண்க" என்பது திருவாசகம். (திருவண்டப் பகுதி.)

தெய்வங்கள் பல; அல்லது தேவர்கள் பலர்.

''வையத்துள் வாழ்வாங்கு வாழ்பவன் வான்உறையும்
தெய்வத்துள் வைக்கப் படும்.'' (திருக்குறள் 50)

எனும் குறளில் ''தெய்வத்துள்'' என்றமையால் தெய்வம் பல என்பது விளங்கும்.

''பெற்றாற் பெறின்பெறுவர் பெண்டிர் பெருஞ்சிறப்புப்
புத்தேளிர் வாழும் உலகு.'' (திருக்குறள் 58)

''செல்விருந்து ஓம்பி வருவிருந்து பார்த்திருப்பான்
நல்விருந்து வானத் தவர்க்கு.'' (திருக்குறள் 86)

என்னும் குறள்களில் ''புத்தேளிர்'' என்றும் ''வானத்தவர்க்கு'' என்றும் பன்மையாகக் கூறியதனை நோக்குதல் வேண்டும்.

''யாதொரு தெய்வம் கொண்டீர்
அத் தெய்வமாகி யாங்கே
மாதொரு பாக னார்தாம் வருவர்.'' (சூ. 2. 25)

என்னும் சிவஞானசித்திச் செய்யுள் உரையில் சிவஞான சுவாமிகள்,

''நால்வகை யோனியுள் ஒரு யோனிவாய்ப் பட்டுப் பிறப்பன யாவை? அவையெல்லாம் சீவ வர்க்கம். அவ்வாறு பிறத்தல் இல்லது யாது? அது பதிப்பொருள்'' என உரைத்தார். புராணங்களிலும், இதிகாசங்களிலும் தேவர்கள் பூமியில் பிறந்து வாழ்ந்து இறந்தமை பரக்கக் கூறப்படும். ஆயினும் சிவன் பிறந்ததாகக் எங்கும் கதையில்லை. அதனால் சிவனைத் திருமுறைகள் ''பிறப்பில் பெருமான்'' எனச் சிறப்பிக்கின்றன.

''பிறவிப் பெருங்கடல் நீந்துவர்; நீந்தார்
இறைவன் அடிசேரா தார்.'' (திருக்குறள் 10)

என்னும் குறள் ''பிறவியாகிய பெரிய கடலைக் கடத்தற்குப் புணையாகி உதவுவது இறைவன் திருவடி ஒன்றே'' என்பதைத் திருக்குறள் நூல் உடன்பாட்டாலும், எதிர் மறையாலும் வலியுறுத்திற்று. அதில், ''இறைவன்'' என்றது பிறப்பில்லாதவனையே யன்றிப் பிறப்பு உடையவனைக் குறித்தற்கு இயைபே இல்லை. ஏன்? பிறப்புடையவனது திருவடி பிறவிக் கடலைக் கடக்கத் துணை புரியுமோ!

இன்ன பல சைவ சித்தாந்தக் கருத்துக்கள் திருக்குறளை ஆழ்ந்து நோக்கினால் விளங்குவனவாம்.

(நன்றி: ஆறாவது உலகச் சைவ மாநாடு –சிறப்பு மலர் 1997)

# ஆசான் அருளால் ஆசானாயினார்

(தவத்திரு செல்லத்துரை சுவாமி)

சிவயோக சுவாமிகளது நெறி குருநெறி. செல்லப்ப தேசிகர் அவரது ஞானகுரு. செல்லப்பதேசிகரைச் சிவயோகசுவாமிகள் “இன்பசாகரமோனம்” என்னும் வடிவாகக் கண்டார். மௌன முனிவரான செல்லப்பர் சிவயோக சுவாமிகளைச் சாலம் செய்து தன்வயமாக்கினார். சதுர்வித உபாயத்தாலும் தானாகச் செய்தனர். ஆசான் அருளால் ஆசானாகிய சிவயோகக் குருமணி அரைநூற்றாண்டு காலமாக இச்சிவபூமியிலே ஞானதேசிகராய் நடமாடினார்.

### சற்குரு தரிசனத்துக்குப் பக்குவராதல்

**இளமை**

யோக சுவாமிகள் தமது குருநாதரைத் தரிசித்து ஞானமுதிர்ச்சி பெறுவதன் முன்னர் எங்கே வளர்ந்தார்? எப்படி வாழ்ந்தார்? என்பன போன்ற விடயங்களை நிரல்பட எழுதக் கூடிய ஆற்றல் எவரிடத்திலும் இல்லை. சுவாமிகளிடம் இவ்விடயங்களை நேர்முகமாகக் கேட்கக் கூடியதாக இருக்கவில்லை. ஏனெனில் அவர்களோ பெருந் துறவிகளாவர். அநுபூதிபெறாத துறவிகளிடத்தும் அவர்கள் பூர்வாச்சிரம விடயங்களைக் கேட்பது சைவர்களாகிய எமக்குப் பண்பாகாமை யாவரும் அறிவர். இஃது இவ்வாறாயின் உண்மை ஞானமே வடிவாக விளங்கிய மெய்ஞ்ஞானத் துறவிகளாகிய சுவாமிகளிடம் அவர் பூர்வாச்சிரம வரலாற்றினை யார்தான் விபரமாகக் கேட்க முடியும்!

நேரே தரிசனத்துக்குச் செல்பவர்கள் எல்லாரும் சுவாமிகளைச் சிவமாகவே பாவித்தும், பரவியும், பணிந்தும் வந்தார்கள். அப்படியாய் இருக்கையில் அவர்கள் சுவாமிகளைச் சாதாரண மனிதனாக நினைக்க மாட்டார்கள். சாதாரண மனிதராக நினைப்பவர்கள் சுவாமிகளின் தரிசனத்துக்குச் செல்லவும் மாட்டார்கள். சுவாமிகளின் சன்னிதானத்தில் இவ்வகையான வினாக்கள் எவருக்கும் எழுந்ததில்லை. சுவாமிகளின் சமாதியின் பின்பே அவர்களின் வரலாற்றை வரைய முற்படும் யாவரும் இவற்றை ஆராய்கின்றனர். அவ்வாராய்ச்சிகள் எல்லாம் இங்கும் அங்குமாகச் சேர்த்துப் பொருத்திய தொடர்பேயன்றி, எதுவும் உண்மைத் தொடர்பாய் இருக்க முடியாது.

ஒருவர் சுவாமிகளின் பிள்ளைத் திருநாமம் சதாசிவம் என்பர். இன்னொருவர் யோகநாதன் என்பர் வேறொருவர் தம்பிஜயா என்பர். இவ்வாறு ஒவ்வொருவரும் தாம் தாம் கேள்விப்பட்டதற்குத் தகக் கூறினாரேயன்றி, எவராவது சுவாமிகளிடமிருந்து நேர்முகமாகக் கேட்டறிந்ததை நாமறியோம். வளர்த்த மாமியார் இப்படிக் கூறினார், கூடித் திரிந்த விதானையார் இப்படிக் கூறினார், என்று அறிகிறோமேயன்றி உண்மையைத் திட்டவட்டமாகக் கூறுவார் எவருமிலர். இந்நிலையில் சுவாமிகளின் சிறுவயதுக்கால வரலாறு இருள் சூழ்ந்த ஒன்றாகவே என்றும் இருக்கும். எனினும் சுவாமிகள் கூறியதாக நிலவும் சில கதைகளிலிருந்து அவர்கள் பூர்வாச்சிரமத்தை மேல்வருமாறு திரட்டிக் கூறலாம்.

வளம் நிறைந்த ஈழத் திருநாட்டின் வடபகுதியில் யாழ்ப்பாணம் எனும் சிறப்புடையதொரு நகரம் உளது. இந்நகரின் எல்லைக்கு உட்பட்டதாகக் கொழும்புத்துறை என்னும் ஓர் ஊர் உள்ளது. இவ்வூரில் பழங்குடி மக்கள் சைவப்பண்பில் சாலச்சிறந்து விளங்கினர். இவ்வூரே பல்லாண்டுகளாக எங்கள் குருநாதனின் வசிப்பிடமாகப் பொலிந்து விளங்கியது. தொன்மைமிக்க கந்தகோட்டம் விளங்கும் மாவிட்டபுரத்தில் தவத்திரு சின்னாச்சிப்பிள்ளை என்ற திருப்பெயருடைய இவரது அன்னையார் பிறந்தார். அவர்களின் சந்ததி உறவினர் இன்றும் அக்கிராமத்தில் உள்ளனர். அவர்களுள் அண்மையிற் காலஞ்சென்ற யமன் அப்புக்குட்டி என்பவரைத் தமது மாமனார் என்று சுவாமிகள் கூறியது எமக்குத் தெரியும். தாயாரின் பிறப்பிடமாகிய மாவிட்டபுரமே சுவாமிகளது பிறப்பிடமாகும். இவர்களது தந்தையார் பெயர் அம்பலவாணர் என்பதாகும். தந்தையார் பிறப்பிடமும் மாவிட்டபுரத்துக்கு அண்மையில் உளதாகும் என்பர் சிலர். உண்மை யாதென இற்றைவரை அறிகிலோம். என்றாவது அறிய வருமோ என்பதும் ஐயத்துக்கு இடமேயாம். இஃது அத்தியாவசியமும் ஆகாது. இவர் களுடைய வாழ்க்கையைப் பற்றி விரிவாக அறிகிலோம். இவர்கள் மஸ்கேலியாப் பகுதியில் வியாபாரம் செய்து வாழ்ந்தமையால் கொழும்புத்துறையில் உள்ளார்க்கும் ஏனையோர்க்கும் இவர்களைப்பற்றி ஏதும் விரிவாக அறிந்திருக்க முடியவில்லைப் போலும். சுவாமிகளின் சிறிய தகப்பனார் பெயர் சின்னையா. இவர் பிற்காலத்தில் கத்தோலிக்க

கிறித்தவ மதத்தைத் தழுவியிருந்தார். அம்பலவாணர் சகோதரியாகிய முத்துப்பிள்ளை அம்மையாரிடமே சுவாமிகள் தமது சிறு பிராயத்தில் வளர்ந்து வந்தார். தகப்பனார் முதுசொமாகத் தமக்குச் சுன்னாகம் பூதவராயர் கோவிலடியில் ஒரு பனை வளவு இருப்பதாகச் சுவாமிகள் ஒரு முறை எமக்குக் கூறியுள்ளார். பெற்றாருடன் இவர் சிறுவயதில் கொழும்புத்துறையிலேயே வசித்து வந்தார். கொழும்புத்துறையில் உள்ள துண்டி என்று அழைக்கப்படும் பகுதியில் வாழ்ந்து வந்தார். அவர்கள் வளவில் குலதெய்வமாக ஒரு வைரவமூர்த்தியை வைத்து வணங்கி வந்தனர். பின் சுவாமிகளின் உறவினர் துண்டியை விட்டுக் கச்சேரி யடிக்கு மாறிவிட்டார்கள். காரணம் யாதென அறிகிலோம். அப்படி மாறிய காலத்தில் அந்த வைரவ மூர்த்தியையும் எடுத்து வந்து விட்டார்கள். துண்டியில் சுவாமியின் யௌவன காலம் கழிந்தது. அக்காலத்தில் தாங்கள் துண்டி வெளியில் விளையாடியதாகக் கூறினார்கள். ஒருமுறை சுவாமிகள் மற்றுஞ் சிறுவர்களுடன் விளை யாடிக் கொண்டிருக்கையில் யாரோ ஒரு கரையூர்வாசி இவர்களை அதட்டிப் பயமுறுத்தினாராம். அப்போது சுவாமிகள் பக்கத்தே நின்றவோர் பூவரசமரத்தில் கம்பு பிடுங்கி அவரைத் துரத்திக் கொண்டு போய் வெகு தூரத்தில் விட்டு வந்ததாகக் கூறினார்கள். அக்காலத்தில் சுவாமிகளை அம்பலவாணர் மகன் எனவே அறிமுகம் செய்வார்களாம்.

மிகச் சிறு வயதிலேயே அன்னையார் சிவபதம் அடைந்து விட்டார் என்பர். ஆயினும் சுவாமிகள் எமக்கும் வேறு அன்பர்க்கும் அடிக்கடி கூறிய மேல்வரும் சம்பவங்களில் இருந்து ஏறத்தாழ இவரது பத்தாவது வயதுவரையாவது அனனையார் சீவித்திருக்கின்றார் என ஊகிக்க இடமுண்டு. ஒருநாள் தாம் சாப்பிட்ட சட்டுவத்துடன் சோற்றினைக் கொண்டுபோய் வெளியில் வீசியபோது தம் அன்னை ‘‘நீ பிச்சையெடுத்துத் தான் சீவிப்பாய்’’ என்று கூறியபடி என்றும் பிச்சைக்காரனாகவே தாம் வாழ்ந்து வருவதை மிகவும் இறும்பூது கொண்டு சொல்லி மகிழ்வார். ‘‘தாய் சொல்லைத் தட்டாதே’’ எனும் ஔவை மொழியை அடிக்கடி உணர்த்தவும் இச்சம்பவத்தைக் கூறுவார். அன்றியும் மாவிட்புரம் கந்தசாமிகோயில் தேர்த் திருவிழாவுக்குத் தமது அன்னையார், கையிற் பிடித்துக் கூட்டிச் சென்றதாகவும், ஒரு முறை நல்லூர் முருகன் கோயில் திருவிழாவிற்குத் தாயாருடன் செல்லும் பொழுது

இருபகுதி மக்கள் கலகம் செய்து கல்லெறிபட்டதாகவும், தமது காலொன்றில் ஒரு கல்பட்டுத் தாம் வருந்தியதாகவும் கூறியுள்ளார்.

தமது அன்பர்களுக்குக் கதையோடு கதையாகக் கூறியதிலிருந்து இவர் **பிறந்த காலத்தை ஆங்கீரச வருடம் வைகாசி மாதம் பதினெட்டாந் தேதி புதன்கிழமை காலை அவிட்ட நட்சத்திரக் கடைக்கூறு நாலாம் பாதம் எனத் தமிழ்ப் பஞ்சாங்கக் கணக்கின் படி ஒருவாறு ஊகித்துக் கணக்கிட்டிருக்கின்றனர். (இது ஆங்கிலேயர் கணக்கின்படி 1872ம் ஆண்டு மே மாதம் 29ம் தேதிக்குச் சரியாகும்)** இக்குறிப்பின்படி சந்நியாச யோகமே விசேட பலனாகும். எனவே அம்பலவாணருக்கும் சின்னாச்சிபிள்ளை அம்மையாருக்கும் அருந்தவக் குழந்தையாக **1872ம் ஆண்டு யோகநாதன்** அவதரித்தார் என நாம் நிச்சயம் செய்யலாம்.

**கல்வி**

சுவாமிகள் கல்வி கற்ற பாடசாலை கொழும்புத்துறையில் அந்நாளில் இருந்த கத்தோலிக்கப் பாதிரிமாரின் ஒரு நிறுவனமாகும். அக்காலத்தில் கிறித்தவப் பாடசாலைகளில் சேர்க்கும் சைவப் பிள்ளைகளுக்கு ஒரு கிறித்தவப் பெயரை முன்வைத்தே பாடசாலைப் பதிவேடுகளில் பதியும் வழக்கம் இருந்தது. அதற்கியையப் பாடசாலையில் **ஜோன் என்னும் நாமம்** இடப்பட்டதாக அறிகிறோம். அதற்குமுன் அவர்களின் பிள்ளைத் திருநாமம் எது என்பதை அறிவார் எவரும் ஈண்டு இங்கில்லை. பாடசாலையில் படிக்கும்போதும் மிகுந்த துடிப்பும், வீரமும் ஒரு பாலகனாகவே காணப்பட்டார். ஆரம்பப் பாடசாலைப் படிப்பின் பின் சிறிய தந்தையார் உதவியுடன் யாழ்ப்பாணம் சம்பத்திரிசியார் கலாசாலையில் (St. Patricks College) சேர்ந்து ஆங்கிலமும், தமிழும் படித்தார். இத்துடன் அவரது பாடசாலை வாழ்வு நிறைவுற்றது.

**இயற்கையழகும் இறை நினைவும்**

பாடசாலைப் படிப்பு முடிந்ததும் தந்தையார் மைந்தனை அழைத்துக் கொண்டு தாம் தொழில் செய்யும் இடமான மஸ்கேலியாவுக்குச் சென்றனர். அங்கே மைந்தன் தம்மோடிருந்து தொழில் பயில வேண்டுமென்பதே தந்தையின் விருப்பமாயிருந்தது.

ஆனால் மைந்தரோ பசுமையும், குளிர்மையும் நிறைந்த மலைப்பிரதேச அழகிலே மனம் பறிகொடுப்பவராய் இருந்தார். நுண்துமி சிந்தும் வேளைகளில் சட்டையும் அணியாமல் பிடித்தமான ஓரிடத்து அமர்ந்து வெறித்த பார்வையினராய் இருப்பார். பவளநிறமான பாக்குக் குலைகளுடன் நீண்டு வளர்ந்து நிற்கும் கமுக மரங்களில் அவர் நெடுமாலைக் கண்டனரோ? பட்சிகளின் தீங்குரல் இனிமையில் கண்ணனின் புல்லாங்குழல் இசை நினைவு வந்ததோ? மலைச்சாரலில் கிளைத்தோங்கி நிற்கும் தனிமரம், ஆடும் மயிலையும் அம் மயிலேறி வரும் குன்றுதோறாடும் குமரனையும் ஞாபகமூட்டியதோ? இருந்தபடியே இருக்கும் மலைகளும், அம் மலைகளில் தவழ்ந்து விளையாடும் மேகமும் பேசும் மௌன மொழியின் சுகம் புரிந்ததோ! எழிலார்ந்த இயற்கைக் கோலங்களாய்ப் பொலிந்து தோன்றுவது இறைவனின் இன்னருளேயென்பதை நுணுக்கமாய்க் கண்டனரோ? இவ்வாறு தனிமையில் இட்டகால் இட்டகையனாக அமர்ந்து பேயே போன்றிருக்கும் இயல்பு, இலாபத்திற் கண்ணாயிருக்கும் வியாபாரத் தொழிலுக்கு ஏற்றதல்ல என்பதைத் தந்தையார் அறிவார். ஆதலால் மைந்தனை மஸ்கேலியாவிலிருந்து கொழும்புத்துறைக்கு அனுப்பி வைத்தார்.

**வணக்கம் மணக்கும் வேலை**

கொழும்புத்துறையைச் சேர்ந்த சிறிது காலத்தில் கிளிநொச்சியில் இரணைமடுக்குளத் திட்டத்தில் வேலைக்கருவிக் களஞ்சியப் பாதுகாவலர் எனும் உத்தியோகம் அவருக்குக் கிடைத்தது. இவ்வுத்தியோகம் அவருக்கு மிகவும் உவப்பாய் அமைந்தது. காலையில் வேலைத் தலத்திற்குச் செல்வோருக்கு வேண்டிய கருவிகளை எடுத்துக் கொடுப்பதும் மாலையில் அவற்றைப் பெற்றுப் பக்குவமாக வைப்பதும் ஆய இவையே அத்தொழிலின் வேலைகள். எனவே இது ஒரு சோலியற்ற ஆறுதலான தொழில். குடிமனைகள் குறைந்ததும், மயிலாடுஞ் சோலைகளை உடையதுமான ஆரணியச் சூழலிலே வாய்த்த இந்த ஆறுதலான தொழில் அவர் எண்ணிய வண்ணம் வாழ ஏற்றதாய் அமைந்தது. அவர் தமது கடமையைக் கவனமாகச் செய்தார். தம்முடைய உத்தியோகக் கடமைக்கு மேலாக அலுவலகச் சூழலிலே கனிதரும் மரங்களை நட்டுக் கவனமாகப் பராமரித்து வந்தார். அவ்வாறு அவர் பராமரித்து வளர்த்த மாமரம் ஒன்று

இன்றும் "சாமியார் மரம்" என்ற பெயருடன் கிளிநொச்சியில் உள்ளது. (இதன் வித்துக்களின் முளைத்த கன்றுகளில் ஒன்று வளர்ந்து, கிழக்கே செய்கலடி சிவதொண்டன் நிலையத்தில் நின்று கனி உதவுகின்றது. கிளிநொச்சியில் அந்த மரம் இருக்கும் காணியும் சிவதொண்டன் சபையாரின் உபயோகத்திற்கென உறுதி முடிக்கப்பட்டுள்ளது.) அவர் தம்மோடு பணிபுரிபவர்களுடன் அன்பார்ந்த உள்ளத்தினராய்ச் சந்தோஷமாகப் பழகினார். பண்போடு வார்த்தையாடினர். பணப்பற்றுச் சிறிதும் இல்லாதவராய் இருந்தனர். தாம் பெறும் அந்த அந்த மாதச் சம்பளத்தை அந்த அந்த மாதத்திலேயே செலவழித்துவிட்டு அடுத்த மாதத்துக்கென எதுவும் சேகரியாதிருக்கும் பழக்கத்தைப் பேணி வந்ததாகப் பின்னர் தம் அன்பர்களிடம் கூறினர். தமக்கு வேண்டியது போக மீதியைக்கோயில்க் கருமங்களுக்கும், உற்றார் உறவினர்க்கும், ஏழை எளியவர்க்கும் கொடுத்து வந்தனர். அவரது சொல்லும் செயலும் அவருள்ளே நிறைந்து கிடக்கும் அதிமானுடத்தைப் பறைசாற்றி நின்றமையை அவரோடு பழகியோர் பலரும் அறிந்தனர். அவர்கள் இயல்பாகவே சுவாமிகளை உயர் நிலையில் வைத்து மிகுந்த மரியாதையோடு பழகினர். பின்னாளில் துறவு மனப்பான்மை முதிர்ந்து உத்தியோகத்தினின்றும் விலகும் எண்ணத்தைத் தெரிவித்த பொழுது மேலதிகாரியாக இருந்த ஆங்கிலத் துரை(Browny) சிறந்த ஊழியர் ஒருவரை இழப்பதற்கு விரும்பாமையால் அவ்வெண்ணத்தை மாற்றிக் கொள்ளுமாறு மீண்டும் மீண்டும் சுவாமிகளிடம் வேண்டினார். சுவாமிகள் தம் முடிவில் நிலையாய் நிற்பதைக் கண்டதும் "நீங்கள் வேலையை விட்டு விலகுவதானால் உங்களுக்கு விருப்பமான ஒருவரை இவ்வேலையில் சேர்த்துவிட்டாகுதல் செல்லுங்கள்" எனச் சுவாமிகளிடம் வேண்டிக் கொண்டார். இத்தகவலை இவ்வேற்பாட்டின்படி வேலையிற் சேர்ந்துகொண்ட சுவாமிகளை வளர்த்த மாமியாரின் மகனான வைத்திலிங்கம் என்பார் எமக்குக் கூறினர்.

(தொடரும் . .)

> ஆசானைக் கண்டேன் அருந்தவர் வாழ் நல்லூரிற்
> பேசா தனவெல்லாம் பேசினான் – கூசாமல்
> நின்றேன்நீ யாரடா வென்றே அதட்டினான்
> அன்றேயான் பெற்றேன் அருள்.
>
> – யோகசுவாமி

# சிவாஞானபாடியத்தில் சத்தும் அசத்தும்

(சித்தாந்தச் செம்மணி முனைவர் கோமதி சூரியமூர்த்தி
அன்புநெறி சிறப்பாசிரியர்)



## சிவன் ஒருவனே சத்து

பாசம் அசத்து என்ற சிவஞானமுனிவரின் விளக்கம் இக்கட்டுரையில் முன்னர் கூறப்பட்டது. பசுவாகிய ஆன்மா கட்டு நிலையில் அசத்தாதலும் வீட்டு நிலையில் சத்தாதலும் கூடும் என்பதும் விளக்கப்பட்டது. சிவபெருமானே அநாதிமுத்தன் என நூல்கள் கூறும். அவன் ஒருபோதும் கட்டுற்ற நிலையில் நிற்பதில்லை என்பதை அப்பெயர் பெறுவதற்கு காரணம் ஆகும். எப்போதும் முற்றுணர்வினன் ஆகவும் தன்வயத்தனன் ஆகவும் இருத்தல் சிவபெருமானது இயல்பு. மற்றைய இருபொருட்கள் போல அவனுடைய ஆற்றல் ஒருபோதும் மடங்குதல் இல்லை. ஆதலால் இறைவனை எவ்வகையாலும் அசத்து என்றல் கூடாது. எனவே எவ்வகையாலும் சத்தே ஆதலும், எவ்வகையாலும் சித்தே ஆதலும் இறைவன் ஒருவனுக்கே உரிய இலக்கணமாகும் என்று சிவஞானமுனிவர் கூறுகின்றார் (பேருரை. பக். 759–760). எனவே **மாறுதல் அடையாமல் என்றும் ஒரே தன்மையாய் நிற்கும் சத்தாய் உள்ளது பதிப்பொருள் ஒன்றே என்பது தெளிவு.**

## சத்திள் இயல்பு

மெய்கண்டார் ஆறாம் சூத்திரம், இரண்டாம் அதிகரணத்தில் **“இனி இவ்விரண்டு தன்மையும் இன்றி வாக்கு மனாதீத கோசரமாய் நிள்ற அதுவே சத்தாய் உள்ள சிவம் என்று உணற்பாற்று”** என மேற்கோள் கூறுகின்றார். இங்கு வாக்கு என்பது பாசஞானத்தையும், மனம் என்பது பசு ஞானத்தையும் குறிக்கும். அதீதம் என்றால் அப்பாற்பட்டது எனப்பொருள். சத்தாகிய சிவம் பாசஞானத்தாலும், பசு ஞானத்தாலும் அறிவதற்கு அப்பாற்பட்டவன். கோசரம் என்பதற்கு அகப்பட்டு விளங்குவது எனப்பொருள். சத்தாகிய சிவம் சிவஞானத்தால் உணரும் தன்மையன். எனவே பாசஞானத்தையும், பசு ஞானத்தையும் கடந்து நின்று, வேற்றமை அற்று நின்று உணரும் சிவஞானத்தால் விளங்குவதாகவும் நிற்பது சத்துப்பொருள் என சிவஞானமுனிவர் விளக்குகின்றார். அவ்வாறாகிய சத்துப்பொருள் இத்தமையுடையது என அறிய வாராமையின் அதனை பொதுவாக ‘அது’ என்று

மெய்கண்டார் கூறினார் மகாவாக்கியங்களிலுள்ள ஒன்றான ‘தத்த்வம் அசி’ என்பது ‘அது நீ ஆகின்றாய்’ எனப் பொருள்தரும். ‘அதுவே சத்தாய் உள்ள சிவம்’ என்பதனை ‘அது சத்தாய் உள்ள சிவமே’ என்று மாற்றிக் கூட்டுக என்று சிவஞானமுனிவர் கூறுகின்றார் (பேருரை. ப. 775).

### சத்தாகிய மெய்ப்பொருள் பற்றிப் பிற மதத்தார் கூறும் கூற்றுகளும், அவற்றுக்குச் சிவஞானமுனிவர் மறுப்பும்

### மாயவாதிகள் கூற்று

மாயாவாதிகள் இறைவன் வாக்கிற்கும், மனதிற்கும் அப்பாற்பட்டவன் என்பதை உடன்பட்டு, கோசரம் என்பதை மறுப்பர். அவர்கள் கொள்கைப்படி பரம்பொருள் ஒன்றே உள்பொருள். அதற்கு பரமார்த்தம் (உண்மைநிலை), விவகாரம் (வழக்குநிலை) என இரண்டு நிலைகள் உண்டு. ஒன்றாகிய பரம்பொருளை விவகார நிலையில் அவிச்சையின் வயப்பட்டு ஞாதா எனவும், ஞேயம் எனவும் இரண்டாகத் தோன்றும். அவிச்சை நீங்கிய போது ஞாதிரு (அறிபவன்), ஞானம் (அறிவு), ஞேயம் (அறியப்படும் பொருள்) என்ற பாகுபாடுகள் சிறிதும் இன்றி பிரமப்பொருள் தனித்து ஞானம் ஒன்றேயாய் நிற்கும். எனவே அதனை வாக்கு மனாதீதம் என்றால் பொருந்தும். கோசரம் ஆகும் என்பது பொருந்தாது. (வாக்கிற்கும், மனதிற்கும் அப்பாற்பட்ட அஃது அநிர்வசனீயம் (இன்னது எனச் சொல்ல வராதது) என்பர்). (பேருரை. ப. 778).

### மாயாவாதிகள் கூற்றைச் சிவஞானமுனிவர் மறுத்தல்

அநிர்வசனீயம் என்று கூறினால் அத்தகைய பொருள் உண்டு என்பதற்குப் பிரமாணம் யாது? அதற்கு ஒரு பிரமாணம் உண்டு என்று கூறினால் அப்பிரமாணத்திற்குப் பரப்பிரமம் பிரமேயம் (அறியப்படுவது) என்று ஆகி அநிர்வசனீயம் என்றல் பொருந்தாது என முடியும். இதற்கு அஞ்சி பிரமாணம் இல்லை என்று விடையிறுத்தால் எவ்வகையாலும் அறியப்படாத இல்பொருளாய் – அசத்தாய் முடியும். சைவ உபநிடதங்கள் பிரமப்பொருளைச் சத்து என்றே கூறுவதால் அஃது அநிர்வசனீயம் என்பதோடு முரண்படும். சைவ உபநிடதங்களிலும், சைவ ஆகமங்களிலும் கூறப்படுவது போல வேற்றுமையின்றி அதுவேயாய் நின்று உணரும் அனுபவத்தில் விளங்கித் தோன்றும் சிவமே சத்துப்பொருள் ஆகும்

என சிவஞானமுனிவர் மாயாவாதிகளை மறுக்கின்றார் (பேருரை, ப. 779)

**தருக்க மதத்தவர் கூற்று**

தருக்க மதத்தவர் பரம்பொருள் கோசரம் என்பதை உடன்பட்டு, வாக்கு மனாதீதம் என்பதை மறுப்பர். ஆன்மா மனத்துடன் கூடும்பொழுதுதான் அறிவு உண்டாகின்றது. மனத்தோடு கூடாத வழி ஆன்மாவிற்கு அறிவு உண்டாதல் இல்லை. மனத்தோடு கூடி ஆன்மா ஏனைய பொருட்களை அறிதல் போல, மெய்ப்பொருளையும் அறியும் என்பர் (பேருரை, ப. 781)

**தருக்க மதத்தவர் கூற்றைச் சிவஞானமுனிவர் மறுத்தல்**

மனம் முதலிய கருவிகள் அசத்து, அறிவற்றது. ஆன்மாவிற்கு இயல்பாயுள்ள அறிவினை மனம் முதலிய கருவிகள் துணையாக நின்று விளக்குவனவே அன்றி முன் இல்லாத அறிவை உண்டாக்குவன அல்ல. ஏனைய பொருட்கள் உயிர்க்கு வேறாய் நிற்பன. மெய்ப்பொருள் உயிர்க்குள் உயிராய் உள்ளே நிற்பது. இவ்வுண்மையை உணர்ந்தோன் சத்தாய் உள்ள சிவபரம் பொருளை அறியுங்கால் தன் அறிவு அதன்கண் அடங்கி அதுவாய் நின்று அந்த மெய்ப்பொருளாலேயே அதனை அறிவான். ஏனைய பொருள்களைப்போல அத் தனி முதற்பொருளை அதனின் வேறாய் நின்று அறிவான் அல்லன் என்கின்றார் சிவஞானமுனிவர் (பேருரை, ப. 782).

**யோக மதத்தவர் கூற்று**

மெய்ப்பொருளை அறிந்தாலன்றி மெய்ப்பொருளால் அறிதல் கூடாமையால், ஆன்மா மெய்ப்பொருளாலேயே அதனை அறியும் என்பது தன்னைப் பற்றுதல் என்னும் குற்றமாகும். அவ்வாறன்றி வாக்கு மனாதீதமாய் நிற்கின்ற பொருள் யோகநூல் கூறும் தியான பாவனைகளில் கோசரமாம் என்றாலே பொருத்தம் என்பர் (பேருரை, ப. 784)

**யோகமதத்தவர் கூற்றைச் சிவஞானமுனிவர் மறுத்தல்**

யோகநூலில் கூறப்படும் பாவனை என்பது என்ன என்பதன் அடிப்படையில் சிவஞானமுனிவர் நான்கு வினாக்களை எழுப்பி

விடையும் கூறுகின்றார்.

1. உலகப் பொருட்களை பாவிக்கும் பாவனைகளைப் போல மனம் முதலிய கருவிகளோடு கூடி நின்று பாவித்தலா? அதுவேயாயின் அதனால் பெறப்படும் அறிவு சுட்டறிவு. சுட்டறிவால் அறியப்படுவது அசத்து.

2. கருவிகளோடு கூடாது நின்று பாவிக்கும் பாவனையா? கருவிகள் இல்லாதபோது ஒன்றையும் அறிய இயலாத கேவலநிலையை உயிர்கள் அடைவதால் அது வெறும் சொல்லளவில் ஆகிய பாவனையே அன்றிப் பயன்தருவது இல்லை.

3. மேற்கூறிய இரண்டும் இன்றிப் பாவிக்கும் பாவனையா? அவ்வாறு வரையறுத்தல் சொல்லமுடியாத பாவனை என்றால் பாவிக்கப்படுவது சூன்யப்பொருள் ஆகும்.

4. மிகவும் பசித்த ஒருவன் உணவு கிடைக்காதபோது உண்டதாகப் பாவிப்பதைப் போல, உணராத பொருளை உணர்ந்ததாகக் கொண்டு பாவனை செய்வதா? அவ்வாறு பாவித்தால் அது போலிப் பாவனையே அன்றி உண்மையாகாது.

மெய்ப்பொருளை அதனது அருள் எனப்படும் பதி ஞானமே துணையாகப் பற்றிப் பாவிக்கின்ற சிவபாவனைக்கு அம்மெய்ப் பொருள் கோசரமாகும்.

**சிவசமவாத சைவர் கூற்று**

மெய்ப்பொருளை அதன் அருளாலே பாவிக்க வேண்டுவதில்லை. முக்தியைப் பெற்ற உயிரினது ஞானம் பதி ஞானத்தோடு ஒப்பது. ஆகையால் அப்பொழுது ஆன்மா தனது ஞானத்தினாலேயே சிவத்தை உணரும். அந்த ஞானத்திற்குச் சிவம் கோசரம் என்பர் சிவசமவாத சைவர்கள் (பேருரை, ப. 787).

**சிவசமவாத சைவர் கூற்றைச் சிவஞானமுனிவர் மறுத்தல்**

ஆன்மாவும், சிவனும் அறிவுப் பொருளாயினும், ஆன்மாவின் அறிவு தூலமும், சிவனது அறிவு சூக்குமமும் ஆகும். இறைவன் சூக்கும முறையில் ஆன்மாவின் அறிவிற்குள் நிற்பான்.

அதனால் பசுத்துவம் நீங்கிய வழியும் ஆன்மாவின் அறிவு இறைவனை வேறாக அறிவதில்லை. தன்னின் வேறின்றித் தனக்குள் நிற்றலின் தன்னால் காணப்படாமல், தனக்குக் காட்டாகி நின்ற ஆன்மாவை அறியமாட்டாத கண்ணொளியைப் போல உயிரின் அறிவும் இறைவனைக் காணமாட்டாது (பேருரை, ப. 788). **உயிரறிவு சிவனது அறிவைத் துணையாகக் கொண்டே சிவனை அறியும்.** "அறிவாம் அறிகின்றான் அறிகின்ற மெய்ப்பொருளும் தானே" (அற்புதத் திருவந்தாதி, 20) என்று காரைக்காலமையார் கூறுவது இங்கு நினைவுகூரத்தக்கது.

### சிவாத்துவித சைவர் கூற்று

பாசத்தின் நீங்கிச் சிவனை அடைந்த உயிர் அவனோடு ஒன்றாகிவிடும். ஆதலால் உயிர் அறிவதும், சிவன் அறியப்படுவதுமாய் நிற்றல் அங்கு இல்லை. அதனால் உயிர் முக்தி நிலையில் சிவனை அவனது அருளால் உணர்ந்து நிற்கும் என்பது பொருந்தாது என சிவாத்துவிதசைவர் கூறுவர் (பேருரை, ப. 789)

### சிவாத்துவித சைவர் கூற்றைச் சிவஞானமுனிவர் மறுத்தல்

அருளால் அறியப்படும் அம்மெய்ப்பொருள் மட்டும் அல்லாது அதனின் வேறாக அப்பொருளை அறிகின்ற உயிரும் முக்திநிலையில் உள்ளதே என்பதை "**அது என்று அறி அறிவும் உண்டே**" (சிவஞானபோத உதாரண வெண்பா, 39) என்ற தொடர் உணர்த்தும் என்று சிவஞானமுனிவர் விளக்கம் தருகின்றார் (பேருரை, ப. 790).

அங்ஙனமாயின் முக்தியில் ஆன்மா சிவத்தோடு கலந்து இரண்டற நிற்கும் என்பது பொருந்துமா? என தடை எழுப்புவர். உயிரின் வேறாய் உயிரறிவால் சுட்டி அறியப்படாமல், சிவன் உயிரின் அறிவின் உள்ளே நிற்றலான் சிவனருளால் அறிகின்ற உயிர் சிவத்தோடு ஒன்றாதல் பெறப்படும் என சிவஞானமுனிவர் விளக்குகின்றார். (உயிர் கலப்பினால் சிவமாகியும், பொருள் தன்மையால் சிவம் ஆகாதும் நிற்கும்). இவ்வாறு மாயாவாதிகள், தருக்க மதத்தார். யோக மதத்தார், சிவசமவாத சைவர், சிவாத்துவித சைவர் முதலியோர் கூற்றுக்களை மறுத்து, **சத்தாகிய சிவம் வாக்கு மனாதீத கோசரமாய் நிற்றலைச் சிவஞானமுனிவர் பாடியத்தில் வலி உறுத்துகின்றார்.** (. . . தொடரும்)

சென்ற இதழ் 4 இன் தொடர்ச்சி........

# நம்பியாரூரர்

(திருமுறைமணி புலவர் எ. வேலாயுதன்)

**முப்போது-முக்காலம்**

நம்பியாரூரர், நம்பியாண்டார் நம்பிகட்கும் சிலநூறு ஆண்டுகட்குப் பின்னர் தோன்றிய திருத்தொண்டர் புராணத்தில் முப்போது என்பதற்கு, நாள்போதுகள், காலை, மாலை, பகல் என்னும் மூன்று பொழுதுகள் என்பதின்றி

தெரிந்துணரின் முப்போது செல்காலம் நிகழ்காலம்
வருங்கால மானவற்றின் வழிவழியே திருத்தொண்டின்
விரும்பிய அர்ச்சனைகள் சிவவேதியர்க்கே உரியன. அப்
பெருந்தகையார் குலப்பெருமையாம் புகழும் பெற்றியதோ.

என்று இறப்பு, நிகழ்வு, எதிர்வு என்று மூன்று காலம் என்னும் பொருள் காணப் பெறுகின்றது. அதற்குக் காரணம் வழிவழியாக திருக்கோயில் பூசனைத் திருத்தொண்டின் இறைவன் விரும்பிய அர்ச்சனை புரிதல் சிவ வேதியர்க்கே உரியன என்று பிரிநிலை ஏகாரத்தால் யாவர்க்கும் பூசனை புரிதல் உரித்து என்னும் பொது நீக்கி உரைக்கின்றதேயாகும். முப்போதும் என்பது எப்போதும் எனலாகின்றது.

இப்பாடலில் அர்ச்சனை பூசனை புரிதல் சிவவேதியர்க்கே உரியன என்றதற்கேற்பவே முப்போது என்பது முக்காலம் என்று பொருள் காணப் பெறுகின்றது. இதுபற்றியே "தெரிந்துணரின்" என்னும் அடைமொழி முப்போது என்பதற்கு முக்காலம் என்ற பொருள் தெரிந்துணரப் புணர்த்தப் பெறுகின்றது.

மற்றும் வேள்விபுரிதல் வேதநெறி. பூசனை புரிதல் ஆகமநெறி. ஆக இருவகை நெறியும், ஒருமையாக வேதாகமங்கள் என ஒரு பெயரிட்டு ஒருமை காண முற்பட்ட காலத்தில்; வேள்விநெறி; வடமொழி மரபின் வந்தது. பூசனைத்திருநெறி, தமிழ்மொழி மரபின் வந்தது. எனினும் இரண்டும், மறைகள் உடையன, மறைநெறியின என்றே கொண்டு வேற்றுமை மயங்கி தமிழ்மரபின் பூசனை விளங்கிய திருக்கோயில்களில் வேள்வி புரி, யாகசாலைகளும் வடமொழி அருச்சனையும் புகுந்து ஆக்கம் பெற்றன. தமிழ் மரபின் ஆதிசைவர் பூசனைபுரி மறையவர் ஆக இருந்தும் தமிழ் வெளியேற்றப் பெற்றது. தமிழகத்தில் தமிழர்

உள்ளனர். ஆனால் தமிழ் தான் இல்லை என்றாற் போன்ற நிலை இதுவே!

ஆதிசைவர் வடமொழி மரபின் வேள்விபுரி மறை, வேதியரல்லர் பூசனை பரியும் பண்டைத்தமிழ் மக்களே. சிவபெருமானைத் தொன்று தொட்டு பூசனை புரிந்து வாழும் தமிழ் மக்களுள் பூசனை அன்பிற் சிறந்த குலப் பெருமக்கள் இவர்கள். எனவே முத்தீ வளர்க்கும் மறைவேதியர் போன்று இவர்கள் முப்போதும் திருமேனி தீண்டி வழிபடுதலின் இவர்கள் சிவவேதியர் எனப் போற்றப் பெற்றனர். நாள் பூசனையை முப்போதும் தொழுது போற்றி பெரும் போராட்டக் காலங்களிலும் பூசனைத் திருநெறியையும் திருக்கோயில்களையும் காத்தளித்தவர்கள் ஆதி சைவப் பெருமக்களே ஆவர். பின்னர் ஆறு காலப் பூசனை ஆகியதும் யாங்ஙனமோ? எக்காலமோ? உண்டானபோது கோடானகோடி உருவாகும் அல்லவா?

ஆக பிள்ளையார், அப்பர் இருவர்தம் காலத்தில் மக்கள் யாவரும் திருக்கோயில் வந்து பூசனைத் திருத்தொண்டு புரியும் பொது நிலை நம்பியாரூரர் காலத்தில் அகத்தடிமை புறத்தடிமை என்று இருவகை தெரிவதும் நம்பியாண்டார் நம்பி காலத்தே அகத்தடிமை பூண்ட சிவவேதியர் பிறரையும் பூசனைக்கு ஆட்படுத்தியருளும் குருக்களாக அர்ச்சகராக இருந்ததும்; திருத்தொண்டர் புராணந் தோன்றிய காலத்தே எக்காலத்தினும் திருக்கோயில் அர்ச்சனை புரிதல் சிவவேதியர்க்கே உரியன எனப் பெற்றதும்; அவர்களும் வேற்றுமை மயங்கி வடமொழி மரபின் புகுந்ததும், தெரியக் காண்கின்றோம். இந்த மாற்றங்களுக்கு யாரையும் குற்றங்குறை சொல்வதும் குற்றமாகும். ஏனெனில் ஆதிசைவரும் பழந்தமிழ் மக்களே ஆவர். தமிழ் மரபுச் சிறப்பினை அறியாமையும் தவக்குறைவுமே முதற் காரணமாக எண்ணத் தகும். மரபுநிலை திரியின் பிரிதுபிரிதாகும் என்கின்றது தொல்காப்பியம்.

வெண்ணெய் நல்லூர் அருள்துறை இறைவன் அர்ச்சனை பாட்டேயாகும் ஆதலால் மண்மேல் நம்மை சொற்றமிழ் பாடுக! என்றான் தூமறை பாடும் வாயான் என்னும் சுந்தரர் வரலாற்றுச் செய்தியும் ஆதிசைவர் தமிழ்மரபின் சிவவேதியர் என்னும் உறுதி உணர்த்துகின்றது காணலாம்.

**திருநெறியின் - திருப்பதிகம்**

நம்பியாரூரர் திருவவதாரம் உலகிற்கு திருத்தொண்டத்தொகை தர இறைவன் அருளியது. இதனை

மாதவம் செய்த தென்திசை வாழ்ந்திடத்
தீதிலா திருத்தொண்டததொகைதரப் போதுவார்
(திருமலை.சருக்-25)

என்று சேக்கிழார் குறிப்பிட்டு உரைக்கின்றார். திருத்தொண்டத தொகையே திருத்தொண்டர் புராணத்தின் முதல்நூல். இதனுள் நம்பியாரூரர் அடியார்க்குமடியேன் என்று தனித்தனியாகப் போற்றி வணங்கிய திருத்தொண்டர் அனைவரும் தமிழகத்தே தோன்றி வாழ்ந்த அந்தணர் முதல் புலையர் வரையிலான மக்களுள் சிவபெருமான் திருத்தொண்டிற் சிறந்த அன்பு நலம் சான்றவரேயாவர். இத்தகு சிறப்பிற்கு இவர்தம் கோத்திரம், குலம், கல்வி, செல்வம் முதலியன பொருட்டன்று சிவபெருமான் திருவடிப்பேரன்பின் திருத்தொண்டே முதன்மையும் முடிவுமாகிய பொருட்டாகும். இதனை,

அத்தர் வேண்டி முன் ஆண்டவர், அன்பினால்
மெய்த்தழைத்து விதிர்ப்புறு சிந்தையார்
கைத்திருத்தொண்டு செய்கடப்பாட்டினார்
இத்திறத்தவர் அன்றியும் எண்ணிலார். (திருக்கூட் -5)

கூடும் அன்பினிற் கும்பிடலே அன்றி
வீடும் வேண்டா விறலில் விளங்கினார்.

என்று சேக்கிழார் தெரிவிப்பதனால் நன்கு தெரியலாம்.

**திருத்தொண்டர் திறம்**

தொண்டு–அன்பினாற் பணிபுரிதல். அன்பு – என்பும் பிறர்க்கெனும் பண்பு எனவே சிவபெருமானின் திருவடிப்பேரன்பே நாளும் தளர்வின்றி பெருகியோங்கப் புரிதலின் திருத்தொண்டு எனலாயிற்று. இத்திருத்தொண்டத் தொகையடியார்கள், பூசனைத்திருநெறியைத் போற்றியவர்கள் பூசனைபுரிவார்; நந்தவனப் பணிபுரிவார். திருவிளக்கு ஏற்றுவார் திருக்கோயில் தூய்மை செய்வார் அடியார்க்கு அடியராய்த் தொண்டர்க்குத் தொண்டராவார். விருந்தோம்பல் புரிவார். இறைவன் பொருள்சேர் புகழைப் பேசுவார் பாடுவார் ஆடுவார் அன்புடன் திருக்கூட்டம் கண்டும், போற்றியும் பல்லாற்றானும் அன்பு தழைப்பார். இவர்கள் மனநினைவிலும் திருக்கோயலிலே கட்டுவர் (பூசலார்) பூசனையே புரிவர்(வாயிலார்)

நின்றாலும், இருந்தாலும், கிடந்தாலும் நடந்தாலும்
சென்றாலும், துயின்றாலும், விழித்தாலும் இமைத்தாலும்,
மன்றாடும், மலர்ப்பாதம் ஒருக்காலும் மறவாமைக்
குன்றாத உணர்வுடையார் தொண்டராம் குணம் மிக்கார்.
(பத்த–பணி–புரா. 7)

என்று சேக்கிழார் தெரிவிக்கும் வண்ணம் தொண்டராம் குணம் மிக்கார்.

இவர்தம் திருக்கூட்டச் சிறப்பினை திருவாரூர்ப் பூங்கோயில் திருக்கூட்டச் சிறப்பினில் தெய்வச் சேக்கிழார் அருளிய பத்துப் பாடல்களிலும் தெரியலாம். அவரவர் தனித்தன்மையின் பெருமை மிகு சிறப்பினை திருவாரூர்ப் புற்றிடங் கொண்ட பெருமான் திருவடி தோன்றக் காட்டி கண்டு வழிபட்ட நம்பி திருவடியருள வேண்டிபோது மன்னுசீர் அடியார் தங்கள் வழித்தொண்டை உணரநல்கி பின்னையும் அவர்கள் தங்கள் பெருமையை

பெருமையால் தம்மை ஒப்பார் பேணலால் எம்மைப் பெற்றார்
ஒருமையால் உலகை வெல்வார் ஊனமேல் ஒன்றுமில்லார்
அருமையாம் நிலையில் நின்றார் அன்பினால் இன்பம் ஆர்வார்
இருமையும் கடந்து நின்றார் இவரை நீ அடைவாய் என்று.

அருளிச் செய்ததனாலும் தெரியலாம். திருத்தொண்டர் புராணத்துள் விளங்கத் தெரிந்துணரலாம்.

**தமிழ்மாலைச் செம்பொருள்**

திருத்தொண்டத் தொகையை "தமிழ் மாலைச் செம்பொருளால் திருத்தொண்டத் தொகையான திருப்பதிகம்" (தடுத்.புரா) என்று சேக்கிழார் குறிப்பிட்டு உரைக்கின்றார். எனவே அன்புறு செம்பொருளின் தமிழ் மாலை திருத்தொண்டத் தொகை என்றும் தமிழ் மரபின் அன்புநெறி பேரருள் விளங்கும் பெருமாலை என்றும் தெரியலாம்.

திருத்தொண்டத் தொகையின் திருத்தொண்டர்களுள் தனியடியார் பலரும் தொகை பாடப் பெறுதற்கு பன்னூறு ஆண்டுகட்கு முன்பு இருந்தவரே. மற்று பாடுகின்றபோது இருந்தவர் சிலரே. திருஞான சம்பந்தரும் திருநாவுக்கரசரும் அவர்தம் காலத்தே வாழ்ந்த அடியார்களும் தொண்டத்தொகை பாடப் பெறுதற்கு, இருநூறு ஆண்டுகள் முற்பட்டவரே. அவர்களும் தமக்கு முற்பட்ட காலத்தில் இருந்த கண்ணப்பர். சண்டீசர் கோச்செங்கட்சோழன் முதலிய திருத் தொண்டரையும் தம் காலத்தே வாழ்ந்த நீலநக்கர் சிறுத்தொணடர் குலச்சிறையார் மங்கையர்க்கரசியார் முதலிய அடியாரையும் போற்றிப் பாடியுள்ளனர். (. . . தொடரும் )

**நீத்தார் நயப்புரை**

# சைவப்பெரியார் அமரர் சிவத்திரு நா. சிவலிங்கம் அவர்கள்



சைவசமயத்திற்கும் புலம்பெயர் தமிழர் நல்வாழ்விற்கும் அயராது தொண்டாற்றிய சமூகத் தொண்டர் சைவப்பெரியார் சிவத்திரு நாகரத்தினம் சிவலிங்கம் அவர்கள். தமது எழுபதாவது அகவையில் மார்ச் 02, 2010 செவ்வாய்க்கிழமை ரொறன்ரோவில் சிவபெருமான் திருவடி சேர்ந்தார்.

பெரியாரின் பெற்றோர் நாகரத்தினம் இராசம்மா தம்பதியினர். மனைவி திருமதி ஜனனி சிவலிங்கம். பிள்ளைகள் சிவாஜினி, ஹரனி ஆகியோர். இளவாலையைப் பிறப்பிடமாகக் கொண்டவர். இளவாலை புனித கென்றியரசர், மகாஜனக் கல்லூரிகளின் பழைய மாணவர். கட்டிடக்கலை வல்லுநர்.

பெரியார் அவர்கள் 1966 இல் கனடாவில் குடியேறிவிட்டமையால், பல சமய சமூகப் பணிகளின் முன்னோடியாகவும் புலம்பெயர் தமிழ்மக்களின் வழிகாட்டியாகவும் திகழ்ந்தார். இவர் கனடா இந்து ஆலயச் சபையின் தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும் அதன் தலைவராக ஏழுவருடங்களும், அதன் பொருளாளராக ஒன்பது வருடங்களும் பணியாற்றி றிச்மண்ட் ஆலய வளர்ச்சிக்கு அயராது தொண்டாற்றினார். அவர் தமிழ் ஈழச்சங்கத்தின் தாபக உறுப்பினர்களில் ஒருவராகவும், அதன் ஆரம்ப காலத் தலைவராகவும் இருந்து புலம்பெயர் தமிழ் மக்களின் நல்வாழ்விற்கு அரும்பணி ஆற்றினார். பல சமய சமூக நிறுவனங்களில் உறுப்பினராக இருந்து அவற்றின் வளர்ச்சிக்கு ஆதரவு அளித்து வந்தார்.

பெரியார் அவர்கள் கனடா சைவ சித்தாந்த மன்றத்துடன் மிகுந்த ஈடுபாடும் அக்கறையும் கொண்டு ஆதரவு அளித்து வந்தவர். மன்றம் நடத்தும் குருபூசைகளிலும், விழாக்களிலும் கலந்து சிறப்புச்செய்தும் உரையாற்றியும் வாழ்த்துரைகள் வழங்கியும் ஊக்கம் அளித்து வந்தவர். பெரியாரின் பெருவிருப்பத்தினாலும் முயற்சியினாலும் மூன்று ஆண்டுகள் றிச்மண்ட் ஆலய திருமண மண்டபத்தில் திருவருட் செல்வர் விழாக்கள் நடைபெற்றன. மண்டபத்தை இலவசமாகப் பெற்றுத் தந்து ஆதரவு வழங்கியதோடு

விழாக்களின் நிகழ்ச்சிகளை ஆரம்பத்திலிருந்து முற்று முழுதாக இருந்து ரசித்துப் பராட்டி மன்ற மாணவர்களுக்கும், மன்ற வளர்ச்சிக்கும் ஊக்கமும் ஆக்கமும் தந்தவர். மன்றத்தின் பத்தாண்டு நிறைவை ஒட்டி, றிச்மண்ட் ஆலய திருமண மண்டபத்தில் நடைபெற்ற திருவருட் செல்வர் விழாவில் அவரும் அவர்தம் பாரியாரும் பிரதம விருந்தினர்களாக கலந்து சிறப்பித்து ஆதரவு நல்கி, மன்றப் பணிகளைப் பாராட்டிப் பேருரை ஆற்றிப் பெருமிதம் கொண்டமையை நினைவு கூர்கிறோம்.

சைவப் பெரியார் சிவத்திரு நா. சிவலிங்கம் அவர்களின் ஆன்மா சிவபெருமான் திருவடிகளில் முத்தியின்பம் பெறவும், அவரின் துணைவியார், பிள்ளைகள், குடும்பத்தினர் துயரம் நீங்கி மன அமைதி பெறவும், கனடா சைவ சித்தாந்த மன்றத்தினர், சிவபெருமான் திருவருளை வேண்டி வணங்கி வழிபடுகிறோம்.

## திருவாசகம் - பிடித்தபத்து

புன் புலால் யாக்கை, புரை–புரை கனியப்
பொன் நெடும் கோயிலாப் புகுந்து, என்
என்பு எலாம் உருக்கி, எளியை ஆய் ஆண்ட
ஈசனே! மாசு இலா மணியே!
துன்பமே, பிறப்பே, இறப்பொடு, மயக்கு ஆம்
தொடக்கு எலாம் அறுத்த நல் சோதீ!
இன்பமே! உன்னைச் சிக்கெனப் பிடித்தேன்
எங்கு எழுந்தருளுவது இனியே?

– மாணிக்கவாசக சுவாமிகள்


**நூலகம்**
**TAMIL DIGITAL LIBRARY**

**அன்புநெறி** இதழ்கள் எண்ணிமப் படுத்தும் நூலக **WWW.NOOLAHAM.ORG** என்ற இணையத்தளத்தில் ஆவணப்படுத்தப் படுகின்றன. மலர் 14 இல் உள்ள இதழ்கள் 1–4 இதழ்கள் நூலகத்தில் **ஆவணவகைகளில், இதழ்கள்** என்ற பகுப்பில் வைக்கப்பட்டுள்ளன. முந்திய மலர்களில் உள்ள இதழ்களும் ஆவணப்படுத்தப்பட உள்ளன. அன்பர்கள் நூலக இணையத் தளத்தில் பார்த்துப் படிக்கலாம்.

தொடர்புகளுக்கு: சைவசித்தாந்த மன்றம், கனடா
Email:- saivamanram@gmail.com

**சிறுவர் பகுதி**

சென்ற இதழின் தொடர்ச்சி........



## ஆறுமுகநாவலர் சைவ வினாவிடை-2

### 4. வேதாகமவியல்

**95. சிவாகமத்தின் ஞானகாண்டப் பொருளைச் சுருக்கி இனிது விளக்கும் தமிழ்ச் சித்தாந்த சாத்திரங்கள் எவை?**

திருவுந்தியார், திருக்களிற்றுப் படியார், சிவஞானபோதம், சிவஞானசித்தியார், இருபாவிருப∴து, உண்மை விளக்கம், சிவப்பிரகாசம், திருவருட்பயன், வினாவெண்பா, போற்றிப∴றொடை, கொடிக்கவி, நெஞ்சுவிடுதூது, உண்மைநெறி விளக்கம், சங்கற்ப நிராகரணம் என்னும் பதின்னான்குமாம்.

**96. திருவுந்தியார் அருளிச் செய்தவர் யாவர்?**

உய்யவந்ததேவ நாயனார்.

**97. திருக்களிற்றுப்படியாரை அருளிச் செய்தவர் யாவர்?**

திருக்கடவூர் உய்யவந்ததேவநாயனார். இவர் திருவுந்தியார் அருளிச் செய்த உய்யவந்ததேவ நாயனாருடைய சீடராகிய திருவியலூர் ஆளுடைய தேவ நாயனாருடைய சீடர்.

**98. சிவஞானபோதம் அருளிச் செய்தவர் யாவர்?**

திருவெண்ணெய்நல்லூர் மெய்கண்டதேவர். இவருக்குச் சுவேதவனப் பெருமாள் என்பது பிள்ளைத் திருநாமம்

**99. சிவஞானசித்தியார், இருபாவிருபது என்னும் இரண்டும் அருளிச் செய்தவர் யாவர்?**

சகலாகமபண்டிதர் என்னும் காரணப் பெயர் பெற்ற திருத்துறையூர் அருணந்திசிவாசாரியார். இவர் மெய்கண்ட தேவருடைய சீடர் நாற்பத்தொன்பதின்மருள்ளே தலைவர்.

**100. உண்மை விளக்கம் அருளிச் செய்தவர் யாவர்?**

திருவதிகை மனவாசகங்கடந்தார். இவர் மெய்கண்டதேவருடைய சீடர்களில் ஒருவர்.

**101. எஞ்சி நின்ற சிவப்பிரகாசம் முதலிய எட்டும் அருளிச் செய்தவர் யாவர்?**

கொற்றவன்குடி உமாபதிசிவாச்சாரியார். இவர் தில்லைவாழ் அந்தணருள் ஒருவர். இவர் அருணந்தி சிவாச்சாரியாருடைய சீடராகிய திருப்பெண்ணாடக மறைஞானசம்பந்த சிவாச்சாரியாருடைய சீடர்.

**102. மெய்கண்டதேவர், அருணந்திசிவாசாரியார், மறைஞானசம்பந்தர், உமாபதிசிவாச்சாரியார் என்னும் நால்வரும் எவ்வாறு பெயர் பெறுவர்?**

திருக்கைலாய பரம்பரைச் சந்தானகுரவர் எனப் பெயர் பெறுவர்.

**103. மெய்கண்ட தேவருக்கு ஆச்சாரியார் யார்?**

திருக்கைலாய மலையினின்றுந் தேவ விமானத்தின் மேற்கொண்டு எழுந்தருளி வந்த பரஞ்சோதி மகாமுனிவர்.

**104. பரஞ்சோதி மகாமுனிவருக்கு ஆசாரியார் யாவர்?**

சத்தியஞான தரிசனிகள்.

**105. சத்தியஞான தரிசனிகளுக்கு ஆசாரியர் யாவர்?**

சனற்குமார மகா முனிவர்.

**106. சனற்குமார மாகாமுனிவருக்கு ஆசாரியர் யாவர்?**

திருநந்திதேவர்.

**107. திருநந்திதேவருக்கு ஆசாரியர் யாவர்?**

ஸ்ரீகண்டபரமசிவன்

திருச்சிற்றம்பலம்

.தொடரும்

சென்ற இதழின் தொடர்ச்சி........

## சைவபோதம்-2

(சைவப் பெரியார் சு. சிவபாதசுந்தரம், பி. ஏ. அவர்கள்)

## ஏழாம் அதிகாரம்-சிவபெருமானின் மூர்த்தங்கள்

**விநாயகக் கடவுள்**

விநாயகக் கடவுளுக்கு யானைமுகம் போன்ற முகம் இருப்பதை நீங்கள் காண்கிறீர்கள். இந்த முகம் {சமஸ்கிருதத்தில் தென்னெழுத்திலும், வடவெழுத்தில் (தேவநாகரம்) வேதோபநிடதங்களில் சம்யுக்தாட்சரப் பிரணவத்திலும் துதிக்கை போன்ற பகுதியைக் காண்க.} ஓம் என்ற எழுத்தைப் போன்று அதைக் குறிக்கின்றது. இந்த எழுத்துப் பிரணவமாகிய சுத்த ஞானத்தைக் காட்டுவது.

"பிரணவப் பொருளாம் பெருந்தகை ஐங்கரன்
சரணவற் பதமலர் தலைக்கணி வோமே"

விநாயகக் கடவுள் சுத்த ஞானமே உருவமாக உடையவர். சிவபெருமானும் ஞானமே உருவமாக உடையவர். ஆதலால் விநாயகக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரேயாவர். சிவலிங்கமும் பிரணவரூபம் என்பது முன்னே காட்டப்பட்டது. விநாயகக் கடவுள் ஞானமே உருவமாக உடைய மூர்த்தியாதலால், ஞானத்தைப் பெறுதற்காக அவரை நாம் வழிபடுகின்றோம்.

**வைரவக் கடவுள்**

வைரவக் கடவுளுடைய திருக்கரத்திலே சூலாயுதம் இருக்கிறது. அதற்கு மூன்று சுவர்கள் உண்டு. அந்த மூன்று சுவர்களும் ஐந்தொழில்களையுஞ் செய்யும் ஆரணி, ஜநநி, ரேதயித்திரி என்ற மூன்று சக்திகளையும் குறிக்கின்றன எனறு வாதுள ஆகமம் கூறுகின்றது. மேலும் பட்டினத்தடிகள்

“மூவிலை பொருதாட சூல மேந்துதல்
மூவரும் யானென மொழிந்த வாறே”

என்று கூறியருளினார்.

வைரவக் கடவுள் சூலாயுதத்தைத் தரித்திருப்பதனால் அவர் பஞ்சக்கிருத்தியங்கள் செய்பவரென்று நன்கு விளங்குகின்றது. பஞ்சக்கிருத்தியம் செய்பவர் சிவபெருமான் ஆதலால், வைரவக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரே என்பது வெளிப்படை.

அன்றியும் முன்னொரு காலத்திலே பிரமா முதலிய தேவர்கள் எல்லாரும் செருக்குள்ளவர்களாகிக் கடவுளை வணங்காமல் மிகவும் கெட்டு அலைந்தார்கள். வைரவக் கடவுள் அவர்கள் கெட்டுப்போனதைக் கண்டு இரக்கங் கொண்டு பிரமாவுடைய தலைகளில ஒன்றைக் கிள்ளியும், மற்றைத் தேவர்களுக்கு வேறு வைத்தியம் செய்யுத் அவர்களுடைய செருக்கை அகற்றி அவர்களை நல்வழிப் படுத்தினார் என்று புராணங்கள் சொல்லுகின்றன. ஆயினும் அப்பர் சுவாமிகள் “பிரமன் தன் சிரமரிந்த பெரியோய் போற்றி” எனச் சிவபெருமானே பிரமாவுடைய தலையைக் கிள்ளினார் என்று பாடியருளினார். இதனாலும் வைரவக் கடவுளும் சிவபெருமானும் பேதமற்றவர்கள் என்று விளங்குகின்றது. தேவர்கள் கெட்டுப் போகாதபடி அவர்களுடைய செருக்கை அடக்கி அவர்களை நல்வழிப்படுத்திக் காத்ததுபோல, நம்முடைய செருக்கையும் அடக்கி, நாம் அவரைத் தியானித்து உய்ய அருளும்படி வைரவக் கடவுளை வழிபடுகிறோம்.

**வீரபத்திரக்கடவுள்**

நாமெல்லாம் உலக காரியங்களைத்தான் அதிகமாக நினைக்கின்றோம். கடவுளை அவ்வளவு அதிகமாக நினைக்கிற தில்லை. கடவுளை நினைக்கிறபொழுதும் சில காலங்களிலே உலக காரியங்களைப் பற்றிய எண்ணம் வந்து கடவுளைப் பற்றிய எண்ணத்தை மறைத்து விடுகிறது. ஒருநாள் ஒருவர் சிவபூசை செய்து கொண்டிருந்தார். அப்போது அவருடைய எசமானன் அவரைக் கூப்பிட்டான். அவர் சிவபூசையை அவ்வளவில் விட்டு, அவனிடம் போனார். சிவபூசையிலும் பார்க்க எசமானுடைய பேச்சு மேலானதென்று அவர் நினைத்தார். இப்படியாக நினைப்பது எல்லாம் பிழைகளிலும் பெரும்பிழை. இப்படியே கடவுளுடைய முதன்மையை மறப்பதாகிய பிழையை நீக்குதற்காக வீரபத்திரக் கடவுளை நாம் வழிபடுகின்றோம்.

முற்காலத்திலே தக்கன் என்று ஒருவன் இருந்தான். அவன் சிவபெருமான் மேலானவர் அல்லர் என்று நினைத்து நடந்தான். வீரபத்திரக் கடவுள் அவன்மேல் இரங்கி அவனுக்குப் பரிகாரம் செய்து அவனுக்கு நல்லறிவு வரச் செய்தார். தக்கனுக்கு இப்படி நல்லறிவு வரச்செய்தவர் சிவபெருமானே என்று மாணிக்கவாசக சுவாமிகள்.

‘‘தக்கனையும், எச்சனையும், தலை அறுத்துத் தேவர்கணம்
தொக்கன வந்தவர்–தம்மைத் தொலைத்தது தான்என்?ஏடீ!
தொக்கன வந்தவர்–தம்மைத் தொலைத்தருளி அருள் கொடுத்து, அங்கு
எச்சனுக்கு மிகைத் தலை மற்று அருளினன் காண் சாழலோ!.’’

என்று பாடியருளினார். ஆதலால் வீரபத்திரக் கடவுளும் சிவபெருமானும் ஒருவரே.

**சுப்பிரமணியக் கடவுள்**

சிவபெருமானும் சுப்பிரமணியக் கடவுளும் ஒருவரே என்பதைக் கந்தபுராணத்தில் இலகுவில் காணலாம். சிவபெருமான் அப்படிச் சொல்லி அருளியதாகச் சரிதம் கூறப்படுகிறது.

‘‘ஆதலின் நமது சத்தி அறுமுகன் அவனும் யாமும்
பேதக மன்றால் நம்போற் பிரிவிலன் யாண்டும் நின்றான்
ஏதமில் குழலி போல்வான் யாவையும் உணர்ந்தான்சீரும்
போதமும் அழிவில் வீடும் போற்றினார்க்கு அருள வல்லான்.’’

மேலும் சுப்பிரமணியக் கடவுள் குருமூர்த்தியுமாம். “குருவடிவாய் வந்தென் உள்ளங் குளிரக் குதிகொண்டவே” என்பதைக் கந்தலரங்காரத்திற் காண்க. உலக குருவாகிய அகத்திய முனிவருக்கு இவரே குருவாயிருந்து அருளினார்.

“அருமறை ஆகமமங்க ருங்கலை நூல் தெரிந்த
அகத்தியனுக் கோத்துரைக்கும் அருட்குருவாங் குருவை”

என்று சிவஞானசித்தியாரிற் (பரபக்கம் மங்க 5) கூறப்பட்டிருக்கிறது. எங்களுக்குக் குருவாக இருந்து பாசங்களை நீக்குதற்கு ஆக வேண்டும் வழிகள் எல்லாவற்றையும் காட்டி மோட்சத்தைத் தரும்படி நாம் சுப்பிரமணியக் கடவுளை வழிபடுகின்றோம். அவருக்குப் பக்கத்திலேயுள்ள தெய்வயானையம்மை கிரியாசக்தி ஆதலால் (இம்மூன்று சக்திகளும் சிவபெருமானுடைய சக்திகளாவர். இவர்கள் சுப்பிரமணியக் கடவுளிடத்தும் இருத்தலாலும் சிவபெருமானும் சுப்பிரமணியக் கடவுளும் ஒருவரே என்பது பெறப்படும்.) நல்ல செய்கைகளை நாங்கள் செய்ய அருளவேண்டும் என்று அலரைப் பணிகின்றோம். வள்ளிநாகியம்மை இச்சாசத்தி ஆதலால் நமக்கு நல்ல இச்சைகள் (விருப்பங்கள்) உண்டாக அருள வேண்டும் என்று அவரை வணங்குகிறோம். அவருடைய திருக்கரத்திலேயுள்ள வேலாயுதம் ஞானசக்தியாதலால் நமது அஞ்ஞானத்தை நீக்கி ஞானத்தைத் தரும்படி வேலாயுதத்தை வணங்குகின்றோம்.

... தொடரும்



டன்டாஸ் பல் மருத்துவமனை
போவியாட் பல் மருத்துவமனை
குடும்ப பல் மருத்துவர்
**Dr. Vanathy Jeevakumar**
டாக்டர் திருமதி வானதி ஜீவகுமார்

Family and General Dentistry

**சகல பல் மருத்துவ சேவைகள்**
(Including Braces Implants)
வாரத்தில் ஏழு நாட்கள்


* Veneers * Crowns and Bridges * Braces
* Root Canal Therapy * Dental Implants
* Fillings * Extractions * Dental Cleanings
* Zoom Whitening * Mouth-guards
* Dentures * Bad Breath Prevention
* Oral Home Care Instruction


Dundas Dental Centre
29C Dundas Street E. Mississauga,
Ont., L5A 1V9 (Hurontario/Dundas)
Phone **905-281-0273**
Fax: (905) 281-8792

Bovaird Dental Centre
10025 Hurontario St. Unit 12
Brampton, Ont. ,
(Hurontario/Bovaird Dr.)
Phone **905-846-9929**

தினையளவு போதாச்
சிறுபுன்னீர் நீண்ட
பனையளவு காட்டும்
படித்தால் – மனையளகு
வள்ளைக் குறங்கும்
வளநாட வள்ளுவனார்
வெள்ளைக் குறட்பா விரி

–கபிலர்–திருவள்ளுவமாலை



உறுதி தருவது சிவமே
உள்ளத் துணர்வது சிவமே
பொறுதி தருவது சிவமே
பூரண மானது சிவமே
இறுதி யிலாதது சிவமே
என்னை யுடையது சிவமே
கருத வினியது சிவமே
காசினி யெல்லாஞ் சிவமே.

–யோகசுவாமி–நற்சிந்தனை



**12வது உலகசைவமநாட்டில் நடைபெற்ற சிறுவர் நிகழ்ச்சி**